ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

த.வெ.க. அரசைக் கண்டித்து! மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர்கள் இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – ம.கிரகாம்பெல் கூட்டறிக்கை!







நெல்லை, அக். 29 -

நெல்லை மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை, மற்றும் விலைவாசி உயர்வு த.வெ.க.அரசை கண்டித்து திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு (31.10.2026 சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.என ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட பொறுப்பாளர்கள் இரா. ஆவுடையப்பன் (மேற்கு) மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ. (மத்திய) ம.கிரகாம் பெல் (கிழக்கு) ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதில் அவர்கள் கூறியிருப்பதாவது.

கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி,

தமிழகத்தின் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பததொடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இது போன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும்,பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும்,விலைவாசி உயர்வை கட்டுபடுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து திருநெல்வேலி மாவட்ட தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்,நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் – மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. கூட்டறிக்கை!





தென்காசி, அக். 29 -

தென்காசி மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு,பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு த.வெ.க.அரசை கண்டித்து தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் (31.10.2026 - சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் தலைமையில் நடைபெறுகிறது என ஒருங்கிணைந்த தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:-

கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி,

தமிழகத்தின் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பததொடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இது போன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும்,பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிரான குற்றங் களை தடுப்பதற்கும்,விலைவாசி உயர்வை கட்டுபடுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில்மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர், உள்ளாட்சி பிரதிநிதி கள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மதுரை பழங்காநத்தத்தில் வருகிற 31ஆம் தேதி

த.வெ.க. அரசைக் கண்டித்து கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ. தளபதி, சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ, கூட்டறிக்கையில் மகளிர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுகோள்!







மதுரை, அக். 29 -

தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க த.வெ.க. அரசின் சட்டம் - ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து மதுரை பழங்காநத்தத்தில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பாக வரும் 31ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது,

இதில் பல்லாயிரக்கணக்கான மகளிர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக தமது அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதன் விபரம்

தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, போதை பொருள் விற்பனை அதிகரித்து சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருப்பதோடு பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் மிகப் பெரிய அளவில் நாள்தோறும் அதிகரித்து வருகிறது

மேலும் தமிழ்நாட்டு மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் பாதுகாப்பற்ற மாநிலமாக மாறி வருவதை கண்டிக்கும் வகையில்

தவெக அரசை கண்டித்து திமுக மகளிர் அணி சார்பாக மதுரை மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பாக மதுரை பழங்காநத்தம் நடராஜ் தியேட்டர் ரவுண்டானா அருகில் மதுரை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உமா சிங்கத்தேவன் தலைமையில் மாநகர் மாவட்ட அமைப்பாளர் சரவண புவனேஸ்வரி, மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன், மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், நூர்ஜகான், பிரமிளா தேவி ஆகியோர் முன்னிலையிலும் 31.10.2026 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளான மகளிர் பங்கேற்று கண்டன பதாகைகளை கையில் ஏந்தி கண்டன முழக்கங்களை எழுப்பிட வேண்டும் எனவும் இதற்கு மதுரை வடக்கு, மதுரை மாநகர், மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கழக நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்படியும், அனைத்து மகளிர் அணி மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் அனைவரும் முழுமையாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மாவட்ட செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி, சேடபட்டி மு. மணிமாறன் எம் எல் ஏ ஆகியோர் கூட்டாக தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

ஓசூர் போலி ஜோதிடர் குடும்பத்தில் பல தீயசக்தி இருப்பதாக கூறி ஏமாற்றியது போல்

தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி கொள்ளையடிப்பது தான் தூய சக்தியா! CMsir ?

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கடும் குற்றச்சாட்டு!



நெல்லை, அக். 29 -

தமிழ்நாட்டின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் சகட்டு மேனிக்கு தனியாருக்கு விற்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு ஓசூரில் போலி ஜோதிடர் குடும்பத்தில் பல தீயசக்தி இருப்பதாக கூறி ஏமாற்றியது போல் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி கொள்ளையடிப்பது தான் தூய சக்தியா CMsir? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலைதளத்தில் கடும் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள தனது சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது.

ஓசூரில் நன்றாக வாழ்ந்து கொண்டிருந்த குடும்பம் ஒன்றிற்குள் புகுந்த போலி ஜோதிடர் சிவசாரதி அந்த குடும்பத்துக்குள் பல தீயசக்தி இருப்பதாகவும், அதனை சரியாக்க பரிகாரம் பூஜை செய்ய வேண்டும் என 4 மாதம் வீட்டிற்குள் அடைத்து வைத்து நாடக மாடி ஏமாற்றி ரூபாய் 12 லட்சம் பணத்தையும்,25 பவுன் தங்க நகை களையும் ஏமாற்றிய ஜோதிடரைப் போல் தான் தாங்களும் (விஜய்யும்) நல்லாட்சி நடத்திய தி.மு.க.அரசு மீது பொய்யான குற்றச்சாட்டு களை கூறி தமிழ்நாட்டை ஏமாற்றி ஆட்சியை கைப் பற்றி மக்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட் டீர்களே! CMsir?

குறுக்கு வழியில் கல்லாப்பெட்டிக் கூட்டணி யுடன் ஆட்சியைப் பிடித்த சோபா முதல்வரே! தங்களின் "ஆந்திர ரெட்டி கேங்" மூலம் மின்சாரத் துறை, போக்குவரத்து துறை,குடிநீர் விநியோகம் சென்னை விமான நிலையம்,டாஸ்மாக் மற்றும் பத்திரபதிவுத்துறை உட்பட தமிழ்நாட்டின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் சகட்டுமேனிக்கு தனியாருக்கு விற்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு,ஓசூர் போலி ஜோதிடர் ஏமாற்றியது போல், தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி கொள்ளையடிப்பது தான் தூய சக்தியா. CMsir?

தாங்கள் தமிழ்நாட்டின் பொதுத்துறை நிறு வனங்களை மொத்தமாக விற்பனை செய்ய முயற்சிக்கும் அதே வேளையில் தங்களின் த.வெ.க.நிர்வாகிகள் காவல்துறை துணையுடன் கஞ்சா செடி வளர்ப்பு, கஞ்சா விற்பனை,மெத்தம் பெட்டமைன் தயாரிப்பு மற்றும் விற்பனை, போதை வஸ்துக்கள் வெளிநாடுகளுக்கு கடத்தல்,பாலியல் வன்கொடுமை ஆகியவற்றில் துணிந்து ஈடுபட்டு தமிழ்நாட்டு மாணவ, மாணவிகள் மற்றும் இளைய சமுதாயத்தினரையும் நாசப்படுத்தி வருபவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தடுக்க வேண்டிய தாங்கள் கைகட்டி ரசித்துக் கொண்டிருப்பதை பார்த்து மக்கள் கடுமையான கோபத்தில் இருப்பதை அறிவீர்களா! CMsir?

சங்ககாலத்தில் ஜோதிடத்தை பொய்யாக்கிய இளங்கோவடிகள் வழியில் வந்த திராவிட முன்னேற்றக்கழகம்நவீனயுகத்திலும் ஜோதிடத்தை பொய்யாக்கி "திராவிட மாடல்" அரசு அமைத்து ஐந்தாண்டு காலம் நல்லாட்சி தந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக விரைவில் உங்கள் போலி ஜோதிடத்தை அம்பலப்படுத்தி மீண்டும் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி தரப்போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை CMsir?

இவ்வாறு அவர் தனது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

த.வெ.க. அரசைக் கண்டித்து ஒருங்கிணைந்த தூத்துக்குடி வடக்கு – தெற்கு மாவட்ட

மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி, அக். 29 -

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது..

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பதோடு, குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுபடுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அரசே ஆவின் பால் மற்றும் ஆவின் உப பொருட்களின் விலையை உயர்த்துகிறது.

இந்நிலையில் தி.மு.க தலைமை கழக ஆணைக்கிணங்க, த.வெ.க. அரசைக் கண்டித்து தூத்துக்குடி வடக்கு மற்றும்தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி சார்பில் வருகிற 31.10.2026 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் மாபெரும் "கண்டன ஆர்ப்பாட்டம்" சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் எதிரில், நாம் தமிழர் வளாகத்தின் அருகில் வைத்து நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி வடக்கு, மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், குறிப்பாக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்றிட அழைக்கிறேன்.

கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றிய த.வெ.க அரசை கண்டித்து கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு கண்டனங்களை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் பத்திர அலுவலகங்களை

தனியாரிடம் ஒப்படைப்பதை கண்டித்து ஆண்டிபட்டியில் ஆர்ப்பாட்டம்!

வாழ்வாதாரத்தை காக்க கோரிக்கை!



ஆண்டிபட்டி, அக். 29 –

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் பத்திர பதிவு அலுவலக பணிகளை தனியாருக்கு தாரை வார்க்கும் முடிவை கண்டித்தும், பத்திர நகல் எழுதுவோர் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியும் தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் பத்திர எழுத்தர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பத்திர எழுத்தர்கள் சங்கம் சார்பில் ஆண்டிபட்டி சார்பதிவாளர் அலுவலகம் முன்பு இன்று காலை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு . ஆண்டிபட்டி, தேனி, பெரியகுளம், போடி, கம்பம் சின்னமனூர் உத்தமபாளையம் கண்டமனூர் உள்ளிட்ட பகுதிகளை 50 க்கு மேற்பட்டோர் பத்திர நகல் எழுத்தர்கள், ஆவண எழுத்தர்கள், முத்திரை விற்பனையாளர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய நிர்வாகிகள் கூறியதாவது:

தமிழகத்தில் மைனாரிட்டி தவெக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பத்திர பதிவு துறையில் தனியார் மயத்தை புகுத்தும் முயற்சி நடக்கிறது. பத்திர அலுவலகங்களில் ஆன்லைன் பதிவு, ஸ்டார் பதிவு என்ற பெயரில் தனியார் நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதனால் 40 ஆண்டுகளாக இந்த தொழிலை நம்பி வாழ்ந்து வரும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பத்திர எழுத்தர்கள், நகல் எழுதுவோர் குடும்பங்கள் வீதிக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

பத்திர பதிவு அலுவலகங்களை தனியாரிடம் கொடுத்தால் ஏழை, எளிய விவசாயிகள், பொதுமக்கள் பத்திரம் பதிய முடியாத நிலை ஏற்படும். தனியார் நிறுவனங்கள் கட்டணத்தை பல மடங்கு உயர்த்தி வசூலிக்கும். ஏற்கனவே வழிகாட்டி மதிப்பை உயர்த்தி பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் போதிய ஊழியர்கள் இல்லை, சர்வர் முடக்கம், இணைய தள முடக்கம் என தினமும் பத்திர பதிவு தாமதம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் நள்ளிரவு வரை காத்து கிடக்கும் அவலம் நடக்கிறது.

பத்திர அலுவலகங்களை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை உடனே கைவிட வேண்டும்.

பத்திர நகல் எழுதுவோர் உரிமத்தை புது ப்பித்து வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்.. பத்திர எழுத்தர்களுக்கு நல வாரியம் அமைத்து ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் தேனி மாவட்டம் முழுவதும் பத்திர அலுவலகங்கள் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தப்படும்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் – நாளை

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா! சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை, அக். 29 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (30.10.2026 வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில், தெய்வீகத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, திருநெல் வேலி சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப் படுகிறது.

என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

சிறப்புமிகு இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப் பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.